is to be
t least 2

ntains d
urn into
is the

$5^0$

•C 031

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி 11
இறுதிப் பரீட்சை - 2006
ESP 2472 - சுற்றாடல் கற்கைகள்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 03.03.2006 நேரம்: மு.ப 10.00 - பி..ப 1.00 வரை

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.
ஒவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

1 (i) ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்(ERA)பாடம் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் நோக்கங்களைக். குறிப்பிடுக.

(30 புள்ளிகள்)

(ii) பிள்ளையின் முழுமையான விருத்திக்கு சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எவ்வாறு பங்களிப்புச் செய்யும் என்பதைச் சுருக்கமாக விளக்குக

(30 புள்ளிகள்)

(iii) ஆரம்பவகுப்பில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளை அமுலாக்கும்போது அது இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் எவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ள தென்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

(40 புள்ளிகள்)

2. (i) சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தின் நான்கு விசேட பண்புகளை விளக்குக.

(40 புள்ளிகள்)

(ii) கல்வியின் தேசிய குறிக்கோள்களை அடைவதற்கு அடிப்படையாக அமைந்த பொதுத்தேர்ச்சிகளில் பட்டியற்படுத்தப்பட்ட சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகளைச் சுருக்கமாக விளக்குக.

(30 புள்ளிகள்)

(iii) ஆரம்ப வகுப்புக்களின் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தின் உள்ளடக்கத்திற்கும் ஆறாம் வகுப்பு சுற்றாடல் கல்வி உள்ளடக்கத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்றதென்பதை ஓர் உதாரணத்துடன் விளக்குக.

(30 புள்ளிகள்)

3. (i) மாணவரிடையே ஆக்கத்திறன் விருத்திக்கு உதவும் பாடமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளைக் கருதுவதற்கான காரணங்களை விளக்குக.

(30 புள்ளிகள்)

(ii) மாணவரிடையே ஆக்கச் சிந்தனையை மேம்படுத்துவதற்கு உதவும் நான்கு(04) முறையைப் பட்டியற்படுத்தி, வகுப்பறையில் அவற்றுள் ஒரு முறையை எவ்வாறு அமுல்படுத்தலாம் என்பதை உதாரணத்துடன் விளக்குக.

(30 புள்ளிகள்)

(iii) பிள்ளைகளிடம் ஆக்கத்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியரது வகிபங்கினைச் சுருக்கமாக ஆராய்க.

(40 புள்ளிகள்)

4\. (i) ஆசிரியர் ஒருவரிடம் அவரது பயிற்சி முடிவில் விருத்தி செய்யப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்துடன் தொடர்புள்ளதென இனங்காணக்கூடிய நான்கு தேர்ச்சிகளை விளக்குக.

(40 புள்ளிகள்)

(ii) மேற்குறிப்பிட்ட தேர்ச்சிகளை விருத்திசெய்ய ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய ஒரு நடைமுறையைக் குறிப்பிடுக.

(30 புள்ளிகள்)

(iii) ஆரம்பவகுப்பில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளை அமுலாக்கும்போது ஆசிரியர் ஒருவர் எதிர்கொளும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகளை முன்வைக்க.

(30 புள்ளிகள்)

5\. (i) ‘சுற்றாடலிலிருந்து கற்றல்’
‘சுற்றாடல்பற்றிக் கற்றல்’ மற்றும்
சுற்றாடலுக்காக கற்றல் முதலான எண்ணக்கருக்களை விளக்குக.

(30 புள்ளிகள்)

(ii) தெரிவு செய்யப்பட்ட தொனிப்பொருள் ஒன்றில் ‘சுற்றாடலுக்காகக் கற்றல்’ தொடர்பாக மாணவருக்கு வழங்கக்கூடிய கற்றல் அனுபவங்களின் பட்டியல் ஒன்றைத் தருக.

(30 புள்ளிகள்)

(iii) சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளில் ‘ஒன்றிணைப்பு’ மற்றும் ‘இணைப்புப் பணி’ என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(40 புள்ளிகள்)

6\. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று(03) பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக.

(i) சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளுக்குப் பொருத்தமான மதிப்பீட்டு மற்றும் கணிப்பீட்டு நுட்பங்கள்

(ii) சுற்றாடல் சாார்ந்த செயற்பாடுகளின் ஒரு பகுதியாக சுகாதார மற்றும் உடற்கல்வி.

(iii) சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளில் அழகியற் கல்வியின் அடிப்படைத் தேர்ச்சிகள்.

(iv) சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் கலைத்திட்டத்தில் சமூகக்கல்வி எண்ணக்கருக்கள்.

(ஒவ்வொன்றிற்கும் 33 1/3 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)